# I CAN

THE EARTHSHOT PRIZE

DESIGN for CHANGE

alana

# எர்த்ஷாட் சவால்



> "இந்த அழகான பூமியைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்ட அனைத்து உயிர்களுக்காகவும், இதனை நம்மால் பாதுகாக்க முடியும். இந்த தசாப்தத்தில்(10 ஆண்டுகளில்) நாம் எடுக்கும் முடிவுகள் நம்மை வரையறுக்கும், ஆனால், அதைவிட மிக முக்கியமாக அவை இளைஞர்களின் வாழ்க்கையை வரையறுக்கும்."

இளவரசர் வில்லியம் | எர்த்ஷாட்(THE EARTHSHOT) பரிசின் நிறுவனர் மற்றும் தலைவர்

நவம்பர் 5, எர்த்ஷாட்(THE EARTHSHOT) பரிசு விருது விழா 2026, ரியோ டி ஜெனிரோ

## அன்புள்ள எடுஹீரோ(Eduhero),

நம் பூமியின் எதிர்காலம், நாம் இன்று எடுக்கும் முடிவுகளை பொறுத்தே அமைகிறது.

உலகம் முழுவதும், சமூகங்கள் காலநிலை மாற்றம், மாசுபாடு, காடுகள் மற்றும் வன உயிரினங்களின் இழப்பு மற்றும் அதிகரித்து வரும் கழிவுகள் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்கின்றன. இந்த பிரச்சினைகள் அவசரமானவையாக இருந்தாலும், விஞ்ஞானிகள், விவசாயிகள், தொழில்முனைவோர், சமூக தலைவர்கள் மற்றும் இளைஞர்கள் ஏற்கனவே சிறந்த தீர்வுகளை உருவாக்கி வருகின்றனர்.

எர்த்ஷாட் (THE EARTHSHOT) பரிசு, தைரியமான சுற்றுச்சூழல் தீர்வுகளை கண்டறியவும், கொண்டாடவும் மற்றும் ஆதரிக்கவும் உருவாக்கப்பட்டது. **"அவசரநிலை + நம்பிக்கை = செயல்"** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், தூய்மையான, ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்திற்காக உழைக்கும் மக்களையும் அவர்களின் கருத்துக்களையும் இது வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறது.

**இப்போது, உங்கள் குழந்தைகளின் முறை.**

**எர்த்ஷாட் ஐ கேன் சேலஞ்ச்** (THE EARTHSHOT) **(என்னால் முடியும்)**, 9-17 வயது வரையிலான குழந்தைகளைத் தங்கள் பகுதியில் உள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அதற்கான தீர்வுகளை உருவாக்கி, பூமியை மீட்டெடுக்கச் செயல்பட அழைக்கிறது. குழந்தைகளின் கருத்துக்கள் மதிப்புமிக்கவை என்பதை அவர்களுக்கு உணர்த்துவதன் மூலம், அவர்கள் தங்கள் பள்ளிகளிலும், வீடுகளிலும், சமூகங்களிலும் நம்பிக்கையான மாற்றங்களை உருவாக்குபவர்களாக மாற நாம் உதவ முடியும்.

**'டிசைன் ஃபார் சேஞ்ச்'**, **'அலானா அறக்கட்டளை'** மற்றும் **'எர்த்ஷாட்(THE EARTHSHOT) பரிசு'** ஆகிய அமைப்புகள் இணைந்து, இந்தியா முழுவதும் உள்ள குழந்தைகளைத் தங்களின் "என்னால் முடியும்(ஐ கேன்) என்ற சூப்பர் பவரை வெளிப்படுத்தவும், நேர்மறையான மாற்றத்தை உருவாக்கும் இளைஞர்களின் இந்த இயக்கத்தில் இணையவும் அழைக்கின்றன.

ஒன்றாக இணைந்து, அவர்கள் அனைவருக்கும் தூய்மையான, ஆரோக்கியமான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்க உதவ முடியும்.

ஜேசன் கன்னாஃப்,
தலைமை நிர்வாக அதிகாரி(சிஇஓ)
எர்த்ஷாட்(THE EARTHSHOT) பரிசு

கிரண் பீர் சேத்தி
நிறுவனர், டிசைன் ஃபார் சேஞ்ச்

பெட்ரோ ஹார்டுங்,
தலைமை நிர்வாக அதிகாரி,
அலானா அறக்கட்டளை

சவால் செயல்படுத்தும் கூட்டாளி

DESIGN for CHANGE INDIA

நிகழ்வு கூட்டாளி

MuSo Museum of Solutions

a JSW initiative

# நீங்கள் தயாரா?

## 3 முதல் 5 உறுப்பினர்களை கொண்ட சிறந்த குழுக்களை உருவாக்குங்கள். இப்போது இந்த 4 படிகளை பின்பற்றுங்கள்.

**5 வெற்றியாளர்களுக்குத் தலா $2000 மதிப்புள்ள நிதியுதவி!**

ஒரு நடுவர் குழு 25 திட்டங்களை குறுந்தேர்வு செய்து, ஒவ்வொரு எர்த்ஷாட்(THE EARTHSHOT) பிரிவிலிருந்தும் 1 என 5 வெற்றியாளர்களை தேர்ந்தெடுக்கும்.

வெற்றியாளர்கள் தலா $2000 மானியம், அவர்களுக்கு வழிகாட்ட ஒரு ஆலோசகர், மற்றும் மும்பையில் நடைபெறும் எர்த்ஷாட்(THE EARTHSHOT) பரிசு விருது விழா மற்றும் உச்சிமாநாட்டிற்கான அழைப்பைப் பெறுவார்கள்.

வெற்றியாளர்கள் தங்களின் திட்ட முன்னேற்றத்தை அவ்வப்போது டிஎஃப்சி (DFC) மற்றும் எர்த்ஷாட்(THE EARTHSHOT) அமைப்பிற்குத் தெரிவிக்க வேண்டும்.

படி 1

## உணர்வு

உங்கள் இதயத்திலிருந்து சிந்தியுங்கள்

### 1. கவனிக்கவும்

உங்கள் சுற்றுப்புறத்தை உற்று நோக்குங்கள்.

உங்களை கவலைப்படுத்தும் சுற்றுச்சூழல் சவால்கள் தொடர்பான விஷயங்களை கவனியுங்கள். உங்கள் கவனிப்புகளை ஒரு வரைபடமாக உருவாக்குங்கள் – பின்வருவனவற்றின் மூலம் உங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் வரைபடமாக்குங்கள்:

- நீங்கள் காண்பவை (எ.கா. மாசு, நீர் பற்றாக்குறை, ஆற்றல் விரயம் போன்றவை)
- நீங்கள் உணர்பவை (எ.கா. விரக்தி, பொறுப்புணர்வு, ஆர்வம் போன்றவை)
- நீங்கள் கேட்பவை (எ.கா. சமூக கவலைகள், செய்தி கதைகள் போன்றவை)

### 2. ஒரு எர்த்ஷாட்(THE EARTHSHOT) பிரிவுடன் இணையுங்கள்

உங்கள் கவனிப்புகளை குழுவாக விவாதியுங்கள். உங்கள் சவால்(சேலஞ்ச்) எந்த எர்த்ஷாட்(THE EARTHSHOT) பிரிவைச் சேர்ந்தது?

- இயற்கையை பாதுகாத்து மீட்டடுத்தல்
- நமது கடல்களை புத்துயிர் பெறச் செய்தல்
- நமது காலநிலையை சீர்செய்தல்
- நமது காற்றை சுத்தப்படுத்துங்கள்
- கழிவுகளற்ற உலகை உருவாக்குதல்

### 3. வாக்களிக்கவும்

உங்கள் கவனிப்புகளை உங்கள் குழுவினருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்; நீங்கள் அனைவரும் மாற்ற விரும்பும் ஒரு சவாலைத் தேர்ந்தெடுக்க வாக்களியுங்கள்.


### 4. ஆழமாக ஆராயுங்கள்

நீங்கள் தேர்ந்தெடுத்த பிரச்சினையை நன்கு புரிந்துகொள்ள, அதைப் பற்றி மேலும் விரிவாக ஆராயுங்கள். அதற்கு உதவும் சில கேள்விகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

- இது எப்போது மற்றும் எங்கே நடக்கிறது?
- யார் பாதிக்கப்படுகிறார்கள்?
- இது மக்களையும், விலங்குகளையும், இயற்கையையும் எவ்வாறு பாதிக்கிறது?

### 5. ஈடுபடுங்கள்

இப்போது, அந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களையும் அதனுடன் தொடர்புடையவர்களையும் சந்தித்துப் பேசுங்கள். அவர்களின் கருத்துகள் மற்றும் கவலைகளைப் புரிந்துகொள்ள அவர்களிடம் நேர்காணல் மேற்கொள்ளுங்கள். இதனால், அவர்களுக்காகத் தீர்வை உருவாக்குவதற்குப் பதிலாக, அவர்களுடன் இணைந்து ஒரு தீர்வை வடிவமைக்க முடியும்.




படி 2

## கற்பனை செய்யுங்கள்

வெற்றியை மனக்காட்சியில் காணுங்கள்

### 1. சிந்தனைத் தூண்டல் கருவிகள்

- அனைத்து யோசனைகளும் நல்ல யோசனைகளே... வித்தியாசமான அல்லது துணிச்சலான யோசனைகளை முன்வைக்கத் தயங்காதீர்கள்.
- பிறரின் யோசனைகளை மேலும் மேம்படுத்துங்கள்– 'ஆனால்' என்பதற்கு பதிலாக 'மற்றும்' என்ற வார்த்தையை பயன்படுத்துங்கள்.
- உங்கள் யோசனைகளை மேலும் தெளிவாகப் புரியும்படி படங்களுடன் சித்தரியுங்கள்.

பல யோசனைகளையும் தீர்வுகளையும் உருவாக்கிய பிறகு, அவற்றில் நீங்கள் நடைமுறைப்படுத்தக்கூடிய சிறந்த தீர்வுகளைத் தேர்ந்தெடுக்க QBL கருவியைப் பயன்படுத்துங்கள். உங்கள் தீர்வு பின்வருமாறு இருக்க வேண்டும்;

விரைவாக செயல்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும் (QUICK)

துணிச்சலானதாக இருக்க வேண்டும் (BOLD)

நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும் (LONG LASTING)

### 2. வாக்களிக்கவும்

உங்கள் சவாலைச் சிறப்பாகத் தீர்க்கும் சிறந்த யோசனைகளுக்கு வாக்களியுங்கள்.

பல யோசனைகளை ஒன்றிணைத்து ஒரு சக்திவாய்ந்த தீர்வை உருவாக்க முயலுங்கள்.



**எர்த்ஷாட்(THE EARTHSHOT) இறுதிப் போட்டியாளர்களைப் போலச் சிந்தித்து, உங்களையே கேளுங்கள்:**

- இந்த தீர்வு எவ்வாறு அதிக மக்களுக்கு உதவ முடியும்?
- இது இயற்கைக்கும் நமது சுற்றுச்சூழலுக்கும் உதவுமா?
- இது புதுமையானதாகவும் துணிச்சலானதாகவும் உள்ளதா?
- மற்ற பள்ளிகள் அல்லது சமூகங்கள் இதை பின்பற்ற முடியுமா?
- இது நீண்ட காலம் நிலைத்திருக்குமா? இது மலிவானதா அல்லது நடைமுறைக்கேற்றதா?

படி 3

## செய்யுங்கள்

மாற்றத்தை நிகழ்த்துங்கள்

### 1. திட்டமிடுங்கள்

திட்டமிடும்போது பின்வருவனவற்றை கவனியுங்கள்:

- என்ன வளங்கள் தேவைப்படும்?
- இதற்கான பட்ஜெட் என்ன?
- பணத்தை எவ்வாறு பெறுவீர்கள்?
- எத்தனை பேர் தேவைப்படுவார்கள்?
- இதற்கு எவ்வளவு நேரம் ஆகும்?
- உங்கள் பணியை எவ்வாறு ஆவணப்படுத்துவீர்கள்?

உங்களின் திறமைகளை கருத்தில் கொண்டு, உங்களுக்கான பங்குகளையும் பொறுப்புகளையும் தேர்வு செய்யுங்கள்.

### 2. செயல்படுத்துங்கள்


வெளியே சென்று, நீங்கள் திட்டமிட்டதை நடைமுறையில் செயல்படுத்துங்கள்.

**ஆம், உங்களால் முடியும்!(யூ கேன்!**

### 3. சிந்தித்துப் பாருங்கள்

- இந்த சூழ்நிலையைப் பற்றி நீங்கள் கற்றுக்கொண்ட 3 விஷயங்கள் என்ன?
- உங்கள் குழு உறுப்பினர்களைப் பற்றி நீங்கள் கற்றுக்கொண்ட 2 விஷயங்கள் என்ன?
- உங்களைப் பற்றி நீங்கள் கற்றுக்கொண்ட 1 விஷயம் என்ன?

உங்கள் திட்டத்தின் பயன் நீண்ட காலம் தொடர்வதற்கான வழிகளைப் பற்றி சிந்தியுங்கள்.



எர்த்ஷாட்(THE EARTHSHOT) பரிசு, மக்களுக்கு ஊக்கம் தரும், பலருக்கும் பயன்படும், புதுமையான, அனைவரையும் உள்ளடக்கிய, நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய மற்றும் நம்பிக்கையை ஏற்படுத்தும் தீர்வுகளைச் சிறப்பிக்கிறது. நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள எர்த்ஷாட்(THE EARTHSHOT) துறையில் பணியாற்றும் நிறுவனங்கள், புதுமையாளர்கள், விஞ்ஞானிகள் அல்லது நிபுணர்களைத் தொடர்புகொள்ளுங்கள்.

படி 4

## பகிர்

என்னால் முடியும்(ஐ கேன்)! இப்போது நீங்களும் செய்யலாம்.

### 1. சமர்ப்பிக்கவும்

உங்கள் திட்டத்தை challenge.dfcworld.com இணையதளத்தில் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றிப் **புகைப்படக் கதையாகவோ** அல்லது **வீடியோ கதையாகவோ** சமர்ப்பிக்கலாம்.

ஒவ்வொரு எஃப்ஐடிஎஸ் (FIDS) படியிலும் உள்ள கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

**புகைப்பட கதை:** ஒவ்வொரு படிநிலையையும் விளக்குவதற்காக புகைப்படங்களைப் பதிவேற்றுங்கள். உங்கள் திட்டத்தின் முழு செயல்முறையையும் ஆவணப்படுத்துவதை நினைவில் கொள்ளுங்கள்.

**காணொளிக் கதை:** உங்கள் திட்டத்தின் முழுச் செயல்முறையையும் ஒரு காணொளியாகப் பதிவு செய்து, அதை யூடியூப்பில் பதிவேற்றுங்கள். பின்னர், அதன் பகிர்வு இணைப்பை சமர்ப்பிப்பு தளத்தில் பதிவிடுங்கள்.

**தயவுசெய்து நினைவில் கொள்ளுங்கள்**
நீங்கள் அதிகபட்சம் 16 புகைப்படங்களைப் பதிவேற்றலாம், ஒவ்வொரு படிநிலைக்கும் 4 புகைப்படங்கள். நீங்கள் காணொளி உருவாக்கினால், அது 3 நிமிடங்களுக்கு மேல் இருக்கக்கூடாது.

### 2. ஊக்கப்படுத்துங்கள்

உங்கள் கதையின் தாக்கத்தைப் பரப்புவதற்கான சில யோசனைகள் இங்கே உள்ளன :-)

- பள்ளி அவை
- செய்தித்தாள் கட்டுரை
- தொலைக்காட்சி நிகழ்ச்சி
- வானொலி
- சமூக ஊடகங்கள்
- நிகழ்ச்சி
- சமூக கண்காட்சி
- கலை அல்லது நாடக நிகழ்ச்சி
- அறிவியல் கண்காட்சி
- சுற்றுச்சூழல் கழக விளக்கவுரை



**யூஸ்#ஐகேன்எர்த்ஷாட்சாலஞ்ச்**

உங்கள் திட்டத்தை **challenge.dfcworld.org** -இல் சமர்ப்பிக்கவும்.

# I CAN எர்த்ஷாட் சவால்

"என்னால் முடியும்(ஐ கேன்)" எர்த்ஷாட்(THE EARTHSHOT) சவால்(சேலஞ்ச்), குழந்தைகள் மற்றும் இளைஞர்களை சுற்றுச்சூழல் மாற்றத்தை ஏற்படுத்துபவர்களாக மாற அழைக்கிறது. இது 5 பிரிவுகளில் கவனம் செலுத்துகிறது: **இயற்கையைப் பாதுகாத்து மீட்டெடுத்தல், நமது காற்றை மீட்டெடுத்தல், நம் கடல்களை புத்துயிர் பெறச் செய்தல், கழிவற்ற உலகை உருவாக்குதல் மற்றும் நம் காலநிலையை** சரிசெய்தல்.

**உணருங்கள், கற்பனை செய்யுங்கள், செயல்படுங்கள், பகிருங்கள்** (FIDS) என்ற கட்டமைப்பைப் பயன்படுத்தி, குழந்தைகள் தங்கள் சமூகங்களில் உள்ள சவால்களைக் கண்டறிந்து, எர்த்ஷாட்(THE EARTHSHOT) இலக்குகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றை அடைய உதவும் தீர்வுகளை உருவாக்குவார்கள். **"நாம் எவ்வாறு...?"** மற்றும் **"வாய்ப்புகளை ஆராயுங்கள்..."** என்ற வழிகாட்டும் கேள்விகள் பதில்களை வழங்குவதற்காக அல்ல, புதிய யோசனைகளைத் தூண்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. உங்கள் உள்ளூர் சமூகத்தில் உள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகளை ஆராயவும், மக்களுக்கும் பூமிக்கும் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய புதுமையான செயல்பாடுகளை உருவாக்கவும் அவற்றைப் பயன்படுத்துங்கள்.

## இயற்கையை பாதுகாத்து மீட்டெடுத்தல்

உங்களையே கேளுங்கள்: **"நாம் எவ்வாறு..."**

- உள்ளூர் தாவரங்கள், வனவிலங்குகள் மற்றும் பல்லுயிர்கள் செழித்து வளரக்கூடிய இடங்களை உருவாக்குங்கள்.
- நீரை சேமிக்கவும் இயற்கை வளங்களை பாதுகாக்கவும் புதுமையான வழிகளை உருவாக்குங்கள்.
- பொது இடங்களை தூய்மையாக வைத்திருக்கவும் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் சமூக நடவடிக்கையை தூண்டுங்கள்.

**உத்வேகம்**
இந்தியாவின் க்ஹேயிடி, குறைந்த நீரை பயன்படுத்தி விவசாயிகள் அதிக உணவு உற்பத்தி செய்ய உதவுகிறது.

## நமது காற்றை தூய்மைபடுத்துதல்

**வாய்ப்புகளை ஆராயுங்கள்:**

- மனிதர்களுக்கும் இயற்கைக்கும் ஆரோக்கியமான, பசுமையான இடங்களை உருவாக்குங்கள்.
- மாசுபாட்டை குறைக்கவும் காற்றின் தரத்தை மேம்படுத்தவும் வழிகளை கண்டறியுங்கள்.
- நடைபயணம், மிதிவண்டிப் பயணம் மற்றும் பகிர்ந்து பயன்படுத்தும் போக்குவரத்து உள்ளிட்ட நிலையான பயண முறைகளை ஊக்குவிக்கவும்.

**உத்வேகம்**
கென்யாவின் முகுரு கிளீன் ஸ்டோவ்ஸ் தீங்கு விளைவிக்கும் வீட்டு காற்று மாசுபாட்டை குறைக்கிறது.

## நமது பெருங்கடல்களை மீட்டெடுத்தல்

**வாய்ப்புகளை ஆராயுங்கள்:**

- நதிகள், பெருங்கடல்கள் மற்றும் பிற நீர்நிலைகளை மாசுபாட்டிலிருந்து பாதுகாக்கவும்.
- மறுபயன்பாடு, மறுசுழற்சி மற்றும் பொறுப்பான நுகர்வை ஊக்குவிப்பதன் மூலம் கழிவுகளை குறைக்கவும்.
- சுற்றுச்சூழலை தூய்மையாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க சமூக நடவடிக்கையை தூண்டுங்கள்.

**உத்வேகம்**
ஆஸ்திரேலியாவின் பழங்குடி பெண் வனக்காவலர்கள், சுற்றுச்சூழலை பாதுகாக்க பாரம்பரிய அறிவையும் நவீன தொழில்நுட்பத்தையும் இணைத்து சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாக்கின்றனர்.

## கழிவற்ற உலகை உருவாக்குதல்

உங்களையே கேளுங்கள்: **"நாம் எவ்வாறு..."**

- பழுது பார்த்தல், பகிர்வு மற்றும் மறுபயன்பாட்டின் மூலம் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் ஆயுளை நீட்டிக்கவும்.
- மறுபயன்பாட்டு மாற்றுகளை தேர்வு செய்வதன் மூலமும், கழிவு வகைப்படுத்தலை மேம்படுத்துவதன் மூலமும் கழிவுகளை குறைக்கவும்.
- மதிப்புமிக்க வளங்களை மீட்டெடுத்து சத்துக்களை சுற்றுச்சூழலுக்கு திரும்ப வழங்கவும்.

**உத்வேகம்**
இங்கிலாந்தைச் சேர்ந்த நாட்ப்லா, பிளாஸ்டிக் பேக்கேஜிங்கிற்கு மாற்றாக கடற்பாசி அடிப்படையிலான பொருட்களை உருவாக்குகிறது.

## நமது காலநிலையை சரிசெய்தல்

**வாய்ப்புகளை ஆராயுங்கள்:**

- உங்கள் சமூகத்தில் தூய்மையான மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தீர்வுகளை மேம்படுத்துங்கள்.
- ஆற்றல் பயன்பாட்டைக் குறைத்து, குறைந்த கார்பன் வெளியீட்டைக் கொண்ட வாழ்க்கை முறைகளையும் பயண முறைகளையும் ஊக்குவிக்கவும்.
- மாறிவரும் காலநிலையின் தாக்கங்களுக்கு ஏற்ப மனிதர்களும் இயற்கைச் சூழல்களும் தங்களை மாற்றிக்கொள்ள உதவுங்கள்.

**உத்வேகம்**
வங்கதேசத்தின் ஃப்ரெண்ட்ஷிப், சமூகங்கள் காலநிலை தொடர்பான சவால்களுக்கு பதிலளிக்க உதவுகிறது.

**www.designforchangeindia.com/earthshot-challenge | #ICANEarthshotChallenge**

THE EARTHSHOT PRIZE | DESIGN for CHANGE | alana

சவால் செயல்படுத்தும் கூட்டாளி: DESIGN for CHANGE INDIA

நிகழ்வு கூட்டாளி: MuSo Museum of Solutions (a JSW initiative)